உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவம்.

மலர் 4. | காலயுக்தி௵ ஐப்பசி௴ - 1918௵ அக்டோபர்௴ | இதழ் 10

திருமந்திரம்.

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

சிவஞானபோதம்.

ஆறுஞ் சூத்திரம்.

(196 - வது பக்கத் தொடர்ச்சி.)

இரண்டாமதிகரணம்.

இருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

(இ-ள்.) அறியப்படும் அசத்துப் பொருளும் அறியப்படாத சூனியப்பொருளும் ஆகிய இவ்விருபகுதியுமன்றி, ஒருவாற்றால் அறியப்படாமையும் ஒருவாற்றால் அறியப்படுதலுமாகிய இரண்டு வகையாலும் சிவசத்தாம் எனக் கூறுவர் மெய்யுணர்வினிலை பெற்றுயர்ந்தோர். (எ-று.)

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்— அப்பிரமேயமாக அறியப்பட்டவனை யரன்.

2-வது—ஐயப்பாடு—முதல்வன் வாக்கு மனாதீதப் பொருளோ, கோசரப்பொருளோ. (கோசரம்=அறியத்தக்கது.)

3-வது—பிறர்கூறும் பக்கம்— வாக்குமனாதீதமாகிய அதிருவசனம் என்றல் பொருந்தும். கோசரமாமென்றல் பொருந்தாது. (இது மாயாவாதிகள் பக்கம்.)

கோசரமாமென்றல் பொருந்தும். வாக்குமனாதீதம் என்றல் பொருந்தாது. (இது நையாயிகர் முதலியோர் பக்கம்.)

பாவனைக்குக் கோசரமாதலேயன்றித் தன்னாலுணரும் உணர்விற்குக் கோசரமென்றல் பொருந்தாது. (இது பாதஞ்சலர் பக்கம்.)

பசுத்துவம் நீங்கியவழி ஆன்மஞானத்திற் கோசரமாம் — (இது சமவாத சைவர் பக்கம்.)

முத்தியிற் சிவமேயன்றி உயிரென வேறின்மையின் உயிருக்குக் கோசரமாதலென்பதொன்றில்லை. (இது சிவாத்துவித சைவர் முதலியோர் பக்கம்.)

4-வது— மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு— வாக்கு மனங்களால் ஓதி யுணரப்படும் திருவசனப்பொருளைச் சாதனங்களினின்று அறியவேண்டுவதில்லை யாகையாலும், ஒருவாற்றாலும் அறியப்படாத அதிருவசனப் பொருள் சாதனத்தினின்றும் அறியப்படுதலில்லையாகையாலும், அறியப்படுதலும் அறியப்படாமையுமாகிய இவ்விருதன்மையுமின்றி வாக்குமனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமாம். (வாக்குமனாதீதமாவது பசுஞான பாசஞானங்கட்கு எட்டாமை. கோசரமாவது ஒற்றுமைப்பட்டு நின்றுணரும் அநுபவஞானமாத்திரைக்கே விளங்குதல். வாக்கு என்பது நாதமுடிவான பாசஞானத்தையும், மனம் என்பது பசுஞானத்தையுமாம். முற்கூறிய ஐவரும் பின்வரும் ஐந்து வெண்பாக்களால் முறையே மறுக்கப்படுதல் காண்க.)

5-வது இயைபு—உதாரண வெண்பா.

எண்ணிய சத்தன் றசத்தன்று மென்றுலென்
கண்ணி யுளதென்றன் மெய்கண்டா—னெண்ணி
யறிய விரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மெய்சிவன்று ளாம். (க)

(இ-ள்.) எண்ணிய சத்து அன்று அசத்து அன்று ஆம் என்றால் உளது என்றல் என்கண்ணி—பரமார்த்தமாகிய பரப்பிர மப்பொருள் விவகாரத்திற் கருதப்பட்ட சத்து மன்று அசத்து மன்று என்னின், அங்ஙனம் ஒரு பொருள் உண்டென்பது யாது பிரமாணங்கருதியோ?, அதனைக் கூறுவாயாக. (பிரமாணம் உண் டெனின் அதற்கு அதுபிரமேயம் எனப்பட்டு ஞேயமாவான் செல் லுமென்றஞ்சிப் பிரமாணமில்லை யென்பையாயின்—மெய்கண்டான் எண்ணி அறிய இரண்டு அசத்து ஆம்=சத்தினியல்பை யுணர்ந் தோன் ஆராய்ந்தறியிற் காட்சி முதலிய பிரமாணங்கட்கு விடயமா வதூஉம் ஒருவாற்றானும் பிரமாணமல்லாத சூனியமுமாகிய இரண் டும் மேற்கூறியவாற்றான் அசத்தேயாம்—ஆதல் சத்து ஆம் அறிவு அறியா மெய் சிவன் தாள் ஆம்=ஆதலால் சாந்தோக்கியம் முத லியவற்றுட் சத்து என்று ஓதப்படும் சுட்டறிவினால் அறியப்படாத மெய்ப்பொருள் சைவ உபநிடதங்களினுஞ் சைவாகமங்களினும் அன்னியமின்றி நின்றுணரும் அநுபவமாத்திரையிற் கோசரிப்ப தென்றோதப்படுஞ் சிவனருளாவதன்றி நீகூறுஞ் சூனியமன்று. (எ-று.)

இதனால், "பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் அவிச்சை வயத்தான் ஞாதாவெனவும் ஞேயமெனவும் பகுக்கப்பட்டு, முன் னர்க்கூறப்படுஞ் சாதகங்களினின் றறியவும்படும். அவிச்சை நீங்கிய வழி அப்பகுப்பின்மையாற் சத்தென்றாதல் அசத்தென்றாதல் ஒரு வாற்றானும் ஞேயமாமாறின்றிக் கேவல ஞானமாத்திரையேயாய் நிற்பதொன்றாகலான் அது கோசரமாம் என்றல் பொருந்தாது" என்றுகூறும் மாயாவாதியை மறுத்து "சத்துமன்றி அசத்துமன்றி ஒருபொருள் உண்டு எனின் அதற்குப் பிரமாணம் என்னை? பிர மாணாதீதமாகிய சூனியம் எனின், சூனியமும் அழிபொருளுமா கிய இரண்டும் அசத்தே யென்பது மேற்காட்டினமையால் பிரமப் பொருள் அசத்தென்னப்பட்டுச் சத்தென்னுஞ் சுருதிகளோடு முரா ணுமாகலின் அவற்றுட் சத்து என்றோதப்படும் பரப்பிரமப்பொரு ளாவது உண்மை ஞானத்திற் கேசரிப்பதென யாங்கூறுஞ் சிவ மேயன்றி நீ கூறும் சூனியம் அன்று" என்று கூறி கோசரம் என் றதனை வலியுறுத்தியவாறாம்.

நவராத்திரிவிரதம்:

முன்பொரு திரேதாயுகத்தில் "குன்றரிகலற்றநூறி இருநிலமுழுவதுந் தனதெனக்கோலித் தன்மதவாரணந்திசைதொறு நிறுவிய திறலும், கருங்கழல் வெண்குடைக்கார் நிகர்வண்கையும்" உடைய சுகேது வென்னுமரசன்; இலக்குமியும் கண்டு பொறாமை கொள்ளும்படியான அழகுவாய்ந்த சுவேதி யென்னும் மனைவியுடன் சுகித்துவாழும் நாளில் முன்னை வினைப்பயனால் பகைவர் கையிற்சிக்கி அஸ்திர சஸ்திரங்களாலடிபட்டு அழகுகெட்டு காயப்பட்டு நடக்கச் சுவாதீனமற்றவனாயினன். அவன் மனைவி யதைக் கண்டு கடுந்துன்பமுற்று புருஷனைத் தன் தலையிலும்; முதுகிலும் தோளிலும் தூக்கிக்கொண்டு காட்டிற்சென்று காய் கனி கிழங்கு முதலியவற்றைப் புசித்துக் காடுக் கடந்து பஞ்சவடதீர்த்தக்கரை சேர்ந்தாள். அச்சமயத்தில் அங்கு நீராடுவதற்குவந்த ஆங்கிரச முனிவர் அவர்களுடைய நிலைமையைக்கண்டு மனமிரங்கி அருகே சென்று சுவேதியை நோக்கி அம்மா உன்னைப்பார்த்தால் இராஜபோக மனுபவித்தவள்போற் காண்கிறதே! இக்காட்டிற் சஞ்சரிக்கக் காரணமென்ன! உன்வரலாற்றைச் சொல்வாயாயின் உன் வருத்தமுற்றும் இப்பொழுதே யொழியும்படியான வுபாயம் சொல்லுகின்றேனென்றார். அதுகேட்டு சுவேதி அம்முனிபுங்கவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்து தன் வரலாற்றைச்சொல்லி நிற்க, முனிவர் அப்பஞ்சவடதீர்த்தக்கரையானது துர்க்கை இலக்குமி சரஸ்வதியென்னும் தேவீத்ரயம் வாசஞ்செய்யுமிடமாகையால் அச்சுவேதியை அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வித்துத் தானும் நீராடி நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு குங்குமம் கஸ்தூரி முதலிய பொருள்களையும்; கோட்டுப்பூ கொடிப்பூ முதலிய புட்பங்களையும்; மற்றும் வேண்டிய நிவேதனப்பொருள்களையும் சேகரித்து அன்று ஹஸ்தநட்சத்திரத்தோடு கூடிய புரட்டாசிமாத பூர்வபக்ஷத்துப் பிரதமையாயிருந்ததனால் அப்பிரதமைமுதல் திரிதியை வரையில் துர்க்கையையும்; சதுர்த்தி முதல் சஷ்டிவரையில் லக்ஷ்மியையும்; ஸப்தமிமுதல் நவமிவரையில் சரஸ்வதியையும் பூஜிக்கச்செய்து தசமியன்று புனர்ப்பூஜையும் செய்வித்தனர்.

அம்மூவராது கடாட்சத்தினால் சுவேதி உடனே கர்ப்பந்தரித்து நவமன்மதன்போல் ஓராண்பிள்ளையைப் பெற அக்குழந்தைக்கு

ஆங்கிரச முனிவர் சூரியப்பிரதாபனென்று பெயரிட்டு அவனைத் தமதநுக்கிரகத்தினால் சகல வித்தைகளினுஞ் சமர்த்தனாகச் செய்தனர்; பின்பு அவனுக்குத் தக்க வயது வந்தபோது அவன் தன் தந்தையின் பகைவரை வென்று தன் மாதா பிதாக்கள் கொண்டாடும்படி பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு குறைவற வெகு காலம் வாழ்ந்திருந்தான்.

இவ்விரதத்தை அநுஷ்டிப்பவர்களுக்குச் சகலாபீஷ்ட சித்தியுண்டாகும்; வருஷப்பிரதி வருஷம் புரட்டாசிமீ பூர்வபட்சப் பிரதமை திதிமுதல் நவமிதிதிவரையும் ஆகிய ஒன்பது தினங்களிலும் இராத்திரிகாலங்களில் பராசத்தியாகிய பரமேஸ்வரியைக்குறித்து விசேஷ ஜபதபங்கள், தர்ப்பணங்கள்; பூஜைகள்; ஆஹுதிகள்; சந்தர்ப்பணைகள்; விதிப்படி நடத்துகின்றவர்களுக்கு இஷ்டசித்திகளும் சகல சாம்பிராச்சியங்களும் அந்த மகாதேவி கடாட்சத்தினால் உண்டாகுமென்றும், ஸ்ரீவித்தியா உபாசகர்கள் முக்கியமாயிந்த நவராத்திரி தினங்களில் உபாசித்தால் மந்திரசித்தியடைவரென்றும்; சகல மந்திரங்கள், ஜபங்கள்; பாராயணங்கள்; இந்தக் காலங்களில் செய்தால் இஷ்டசித்தியாகுமென்றும் சாக்தேய தந்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

துர்க்கை இலக்குமி சரஸ்வதி ஆகிய இம்மூவரையும், மும்மூன்று தினமாய் ஒன்பது தினமும் இராத்திரிகாலங்களில் பூஜிப்பது விசேஷமானதாகும்: நவராத்திரி யென்னப்படும் இவ் வொன்பது தினமும் பூஜை செய்யக்கூடாதவர்

"மூலேநாவாஹயேத்தேவீம் ஸ்ரவணேநவிஸர்ஜயேத்"

என்னும் வசனப்படி அந்தப்பக்ஷத்து ஸப்தமியில்வரும் மூல நக்ஷத்திரம் தொடங்கி நவமிவரையில் மூன்று தினமாவது பூஜைசெய்ய வேண்டும்: அதுவும் கூடாமற் போனால், கடைசி தினமாகிய நவமி தினம் வித்தியாபீடமாகிய புத்தகங்களை வைத்து துர்க்கை இலக்குமி சரஸ்வதி ஆகிய மூவரையும் விதிப்படி பூஜிக்கவேண்டும்: அப்படி பூஜிப்பதால் அத்தினம் மஹாநவமி யென்றும், அன்று செய்யும் பூஜை சரஸ்வதி பூஜையென்றும், ஆயுதங்களை வைத்துப் பூஜிக்கின்றபடியால் ஆயுத பூஜையென்றும் சொல்லப்படுகிறது.

மறுநாளாகிய தசமிதிதி பஞ்சபாண்டவரில் விஜயன் வனவாச காலம் கழிந்த பிறகு தன் ஆயுதங்களைத்தான் ஒளித்துவைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து உபயோகப்படுத்திய தினமாகையால் விஜயதசமியென்று சொல்லப்படுகின்றது.

வித்தியாரம்பத்திற்கு அது உத்தமமான தினமாகையால் வாசித்திருக்கிறவர்களும் அந்தக் காலத்தில் கிரந்தங்களைப் படிக்கவேண்டும். ஏனெனில் அது வித்தியாதரணையாக இருக்குமென்று பெரியோர் சொல்லியிருக்கின்றனர். அவ்வாறே அஸ்திர சஸ்திரவித்தை யறிந்தவர்களும் ஆயுதமெடுத்து விளையாடவேண்டும்.

(ஞானபாநு).

ஆத்மாவும் பரமாத்மாவும் ஒன்ருகுமா.

(216 - வது பக்கத்தொடர்ச்சி.)

பிரியா சினேகம்பெற்ற அழகுடைய இரண்டு பக்ஷிகள் ஒரேமரத்தில் கூடியிருக்கின்றன. அவற்றுள் ஒன்று இனிமையாகிய பழத்தைப் புசிக்கின்றது. மற்றொன்று புசியாது பார்த்துக்கொண்டிருக்கின்றது. ... ... எனவும்,

ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்னோ-அநீசயா சோசதி முஹ்யமாநஃ
ஜுஷ்டம்யதா பச்யத்யந்ய மீசம்-அச்ய மஹிமாந மிதி வீதசோகஃ

(முண்டகம் - சுவேதாசுவதரம்)

புருஷன் ஒரேமரத்தில் (சரீரத்தில்) ஈசனல்லாமையால் யோக முற்று அமிழ்ந்து சோகித்துக்கொண்டிருக்கின்றான். ஆயின் அவன் எப்பொழுது மகிழ்வுடையவனும் தனக்கு வேறாகிய பரமாத்மாவைக் காண்கின்றானே அப்பொழுது அவருடைய நிரதிசயானந்த மஹிமைக்குணத்தை யடைந்து சோகத்தினின்றும் நீங்கினவனாகின்றான். ... ... எனவும்

திலேஷு தைலம் ததிநீவஸர்பிஃ ஆபஸ்ரோதஸ் வரணீஷு சாக்நிஃ
ஏவமாத்மாத்மநி க்ருஹ்யதேஸௌ ஸத்யேநைநம்தபசாயோநுபச்யதி

(சுவேதாசுவதரம்.)

எள்ளில் எண்ணெய்போலவும் தயிரில் நெய்போலவும் பிரவாகத்தில் ஜலம்போலவும் அரணியில் அக்னிபோலவும் இவ்வாத்மா ஆத்மாவி

னிடத்தில் அறியப்படுகின்ருர். சத்தியத்தினுலும் தபசினுலும் இவன் அவரைக் காண்கின்ருன் ... ... எனவும்,

ஆத்மந்யே வாத்மாநம் பச்யேத் (ப்ருஹதாரண்யகம்)

ஆத்மாவிலே ஆத்மாவைக் காண்க ... ... எனவும்

தமாத்மஸ்தம்யேநுபச்யந்திதீரா꞉

தேஷாம் சுகம் சாஸ்வதம் நேதரேஷாம். (கடவல்லி, சுவேதாசுவதரம், அதர்வசிரசு.)

ஆத்மாவில் இருப்பவராக அவரை எந்த புத்திமான் பார்க்கிருனே அவனுக்கே சாசுவத ஆனந்தம். பிறர்க்கில்லை ... எனவும்

யஸ்யாத்மாசரீரம் யஆத்மநிதிஷ்டன். (மத்தியந்தினசாகை)

எவருக்கு ஆத்மா சரீரம்-எவர் ஆத்மாயில் இருக்கின்றனர் எனவும்

நித்தியோ நித்தியாநாம் சேதனஸ் சேதநாநாம் (கடவல்லி, சுவேதா சுவதரம்)

நித்தியபதார்த்தங்களுள்ளே நித்தியரும் சேதனப்பொருள்களுள்ளே சேதனரும் ... ... எனவுஞ் சுருதிகள் கூறுகின்றன.

இவற்ருல் ஆத்மாவும் ஆத்மாவினிடத்துள்ள மற்ருேர் ஆத்மாவும் என இரண்டு ஆத்மாக்கள் உளவென்பது பெறப்பட்டது. படவே ஓராத்மா பசுவாகிய நாம் எனவும், மற்ருெரு ஆத்மா நம்மிடத்துள்ள பரமாத்மா எனவும் தெரிவித்ததாயிற்று. அது எதுபோலுமெனில் உடம்புக்கு உயிர் எவ்விதமோ அவ்விதமே ஆத்மாவுக்கு ஆத்மாவாயுள்ளது. அதாவது உயிர்க்கு உயிராயுள்ளது பரமாத்மா என்றும் நிர்ணயித்ததாயிற்று. தைத்திரீய நாராயணவல்லியும் "தஸ்யாச்சிகாயாமத்யே பரமாத்மா வ்யவஸ்திதஃ- அந்த சிகையின் மத்தியிலே பரமாத்மா விசேஷமாயிருக்கின்ருர்" என்று வற்புறுத்தியது.

அல்லாமலும் பேதமுள்ள இவ்விரு ஆத்மாக்களுள் ஒன்று ஆளுவது, மற்ருென்று ஆளப்படுவது என்பதற்கு சுருதிப்பிரமாணங்கள் வருமாறு:—

க்ஞாக்ஞௌத்வாவஜா வீசநீசௌ (சுவேதாசுவதரம்)

பிறவாதவராகிய அறிஞனும் அறிவிலனும் ஆகிய இருவரும் ஈசனும் அநீசனுமாம் ... ... எனவும்

க்ஷராத்மாநா வீசதே தேவ ஏக: (சுவேதாசுவதரம்)

பாசத்தையும் ஆத்மாவையும் ஆளுபவர் ஏகராகிய தேவர் எனவும்

ய ஈசே அஸ்ய த்விபதச் சதுஷ்பத: — பசூநாம் சதுஷ்பதாமுத சத்விபதாம் (தைத்திரீய சம்ஹிதை)

நாற்காலும் இருகாலுமுடைய பசுக்களைப் பசுக்களுக்குப் பதியா யுள்ளவர் ஆளுகிறார் ... ... எனவும்

க்ஷரந்த்வவித்யா ஹ்யம்ருதந்து வித்யா
வித்யாவித்யே ஈசதே யஸ்து ஸோந்ய: (சுவேதாசுவதரம்)

அவித்தை என்றது அசேதனம். வித்தை என்றது சேதனம் (ஆத்மா) இவ்விரண்டையும் ஆளுபவர் அவற்றிற்கு வேறாயுள்ள ஈசர் ... ... எனவும்

ப்ரதாந க்ஷேத்ரக்ஞ பதிர்குணேச:
ஸம்ஸார மோக்ஷஸ்திதி பந்த ஹேது: (சுவேதாசுவதரம்)

பிரதானத்துக்கும் (பாசத்துக்கும்) க்ஷேத்ரக்ஞனுக்கும் (ஜீவாத்மாவுக்கும்) பதியாயுள்ளவர் ஸர்வஞ்ஞாதி குணங்களையுடைய ஈசர், அவர் சம்சாரத்தின் மோக்ஷஸ்திதி பந்தத்துக்குங் காரணர்......., எனவும் ஆரணங்கள் முரசடிக்கின்றன.

இன்னோரன்ன வேதவேதாந்தங்களின் ஹிருதயம் இவ்வாறிருக்க வேதத்திலுள்ள ஆத்மசப்தம் ஒரே பொருளைக் குறிக்குமென்றும், பசுவாகிய ஆத்மா ஒன்று, பதியாகிய பரமாத்மா ஒன்று, என இரண்டு ஆத்மாக்கள் இல்லையென்றும் ஏகாத்மவாதிகள் அஞ்சாது போதித்துச் சாமான்ய சைவர்களை மயக்குகின்றனர். அவர்களுடைய போதனையில் சிக்குண்டு இது பொய் இதுமெய் என்று யூகித்தறிய சக்தியற்று அனேகர் தியங்குகின்றனர். அவர்களுக்கு நல்ல குருநாதன் வாய்க்கும் நாள் என்னாளோ!

வேதத்தில் ஆத்மா ஒன்றென்று கூறியது பரமாத்மாவாகிய பரம்பொருளை-பலவென்றும் உபாதியுடையன வென்றும் கூறியது பசுக்களாகிய ஜீவர்களை. இவ்வேறுபாடுணராது வேதம் ஒன்றே என்று சொல்லிற்று என்று வீண் பூசலிடுவது அறியாமையாகும்.

தென்முகத்தெய்வம் கரத்திலேந்தியுள்ள சிவஞானபோதத்தி னும் இவ்வரிய விஷயத்தை ஆசங்கித்து எடுத்துக்கொண்டு "ஒன் றென்ற தொன்றேகாண் ஒன்றே பதி." எனவும், "பசுவாம் ஒன் றென்ற நீ பாசத்தோடுளேகாண்" எனவும் விடைகூறி மலைவு தீர்த் துள்ளது. வேதமானது பசுக்களாகிய ஆத்மாக்களை ஒன்றே என் று யாண்டும் மறந்துங் கூறியதின்று. இதனை

நாம்பிரமமென்றால் நடுவேயொன்றுண்டாமால்
தேம்பியெல்லாமொன்றாய்த் திகழுநாளென்றுளோ — எனவும்

சொல்லுக்கடங்காச் சுகப்பொருளை நாமெனவே
அல்லும்பகலும் அரற்றுவதென் — எனவும்

நான்றானெனுமயக்கம் நண்ணுங்காலென்றுனை
வான்றானெனநிலைறய மாட்டாய்நீ — எனவும்

விளக்குந்தகளியையும் வேறென்றார் ; நின்னைத்
துளக்கமறஜீவனென்று சொல்வார்பராபரமே — எனவும்

பாராதிநீயாய்ப் பகர்ந்தாலகமெனவும்
ஆராயும்ஜீவனுநீ யாங்கண்பராபரமே. — எனவும்

வானாதிநீயெனவே வைத்தமறையென்னையுநீ
தானாகச்சொல்லாதோ சாற்றாய்பராபரமே. — எனவும்

ஊனென்றிநாதன் உணர்த்துமதைவிட்டறிவேன்
நானென்றபாவிதலை நாணுநாளென்றுளோ. — எனவும்

நானெனநிற்குஞானம் ஞானமன்றந்தஞானம்
மோனமாயிருக்க வொட்டா. — எனவும்

யானெனல்காணேன்பூரணநிறைவில் யாதினுமிருந்தபேரொளிநீ — எனவும்.

நீயற்ற வந்நிலையே நிட்டையதில் நீயிலையோ
வாயற் றவனே மயங்காதே — போயற்
றிருந்தாலும் நீபோகா யென்றுமுள்ளாய்சும்மா
வருந்தாதே இன்பமுண்டு வா. — எனவும்

வரும் தாயுமானசுவாமிகள் திருவாக்கானுமுணர்க. இவற்றால் முப்பொருளுண்மைமுக்காலும் சத்தியமாகும். ஆத்மா பரமாத்மா வாகான் என்பது ஒருதலை.

அவனிவ னானது அவனருளா லல்ல
திவனவ னாகானென் றுந்தீபற
என்றுமிவ னேயென் றுந்தீபற. — திருவுந்தியார்

சுபம். மெய்கண்டநாதன்றுணை.

சோளங்கிபுரம் - சிவஅருணகிரிமுதலியார்.

ஆதிசைவகுல மான்மியம்.

(184 - வது பக்கத்தொடர்ச்சி.)

இனிச் செந்தமிழ்மொழிக்கும் எல்லையில்லாத தைவிகமகிமைகளுள்ளன. விரிப்பிற்பெருகும். நிற்க. எல்லாப்பாஷைகளும் அந்தந்த் தேசவாசிகள் விஷயங்களுணர்ந்து கோடற்பொருட்டுச் சிவாஞ்ஞையால் நிகழ்வனவே. ஒன்றுந்தள்ளுபடியில்லை. அவற்றுள்ளே வடமொழி தென்மொழி யிரண்டும், சிவபிரானே இலக்கணவரம்பு செய்து இரண்டு மகரிஷிகளுக் குபதேசிக்கப்பெற்றமையால், அவ்விரண்டு பாஷைகளு மிகச்சிறந்தனவே. இதுபற்றியே திருமந்திரமும், "ஆரியமுந் தமிழுமுடனே சொல்லிக், காரிகையார்க்குங் கருணைசெய்தானே" என்று விளக்கியருளியது. இதன் பொருள் பரமசிவன் தமது பத்தினியாராகிய உமாதேவியாருக்கு வடமொழியுந் தென்மொழியும் உபதேசித்தருளினு ரென்பதாம். இதுபோலத் தமிழ்விசிட்டங் கூறும் பிரபலப் பிரமாணங்கள் பற்பல உள்ளன. பரமசிவன் தமிழிலக்கணத்தைத் தனக்குச் சமானரென்று உலகெலாமுணர விளக்கிய அகஸ்திய மகரிஷிக்கு உபதேசித்ததாலும், மற்றும் பற்பல அற்புத மகிமைகளாலும் வடமொழியைக் காட்டிலும் தமிழுக்கு விசிட்டங்கூறுவார்பலர். ஆகவே அப்பிராமணர்கள் இது தமிழ்தானேயென்று ஏழனஞ்செய்து ஒதுக்குவது, அவரது அறியாமையன்றி வேறில்லை. அவர்செய்யும் ஏழனமும் பரமசிவன்வரையிற் செல்லுதலால், அப்பிராமணர்கள் பரமசிவதண்டனைக்கே ஆளாவரென்க.

இனிச், சதாசிவமுகோற்பநர்களாதலாற் சிவபுத்திரர்களாய் அப்பரமசிவனைப்போலவே, வேதவேதாந்த சடங்க சிவாகமாதி சகல சாஸ்திரபாராயண அத்தியாபகத்துவாதிகளிலும், தமக்குக் கீழுள்ள பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திராதியர்க்குச் செய்து வைக்கின்ற சிவதீக்ஷாதி சகலகிரியைகளிலும், பரிபூரணமான அதிகாரமுள்ள ஆதிசைவர்களாகிய சிவப்பிராமணர்களுக்கு, வேதாத்தியயனுதிகளில் அதிகாரமில்லையென்று, அசூயையே நிரம்பப்பெற்று அகந்தையே யேற்கொண்டு அறிவிழந்த சிலபிராமணர்கள் கூறுகின்றார்கள். அப்பிராமணர்கள் அங்ஙனங் கூறுவது சார்வபௌமனுகிய ராஜகுமாரனுக் குரியதென்பதில் ஓரணுவளவுஞ் சந்தேகத்துக் கிடமில்லாத ராஜகிரீட மில்லையென்று யாரேனும் ஊத்தை

வாயாற் கூறினல் அதனேடொக்குமன்றி வேறில்லை. ஆயினும், அக்கூற்று உதைபட்டொழியும்படி கூற்றுதைத்த பரமேசுரவாக்காகிய பிரபலப் பிரமாணங்கள் பின்வருவன. உத்தம விவேகிகள் காண்பாராக.

பௌஷ்கராகமம் கிரியாபாதம்.

வேதாசமபரஸ்யைவ சாதிகாரோவிதீயதே
வேதாகமாசாரபரஃ சிவத்விஜயிதீரிதஃ
தஸ்யநித்யமதீதவ்யாஃ வேதாஸாங்க பதக்ரமஃ
தஸ்யவிப்ரஸ்ய சம்போச்ச பேதோநாஸ்தி நஸம்ஸயஃ
பேதம்யக்கல் ப்யதேமோகாத் சதுராத்மா நஸம்ஸயஃ

இ-ள். வேதாகமங்களில் உரிமையுள்ளவர்களுக்கு அதிகாரம் விதிக்கப்படுகின்றது. வேதாகமங்களின் அனுட்டானத்தில் சிரேஷ்டர்கள் என்று சிவத்துவிஜர்கள் சொல்லப்படுகிறுர்கள். அந்தச் சிவத்துவிஜர்களால் பதக்கிரமங்களுடன் சாங்கமாக வேதங்கள் பிரதினமும் அத்தியயனம் பண்ணத்தகுந்தவைகள். அவ்விதமாக அத்தியயனம் செய்த சிவத்துவிஜருக்கும் பரமசிவனுக்கும் பேதமில்லை இதிற்சந்தேகமில்லை. எவனுவனு அறியாமையினலே பேதங்கல்பிப்பானுல் அவன் துராத்மாவேசந்தேகமில்லை யென்பதாம்.

மகுடாகமம்.

வேதாங்கநாநாவிதமந்த்ர தந்த்ரமுத்ரா கிரியாசில்பசுவாக்சுரூபம்
ஆசாரயுக்தம் சுகுணம்ஸ்வரூபம்ஆசாரியமாகூஃ சிவம்ஆதிசைவம்.

இ - ள். வேதங்கள் சடங்கங்கள் அனேகவித மந்திரங்கள் சிவாகமங்கள் தொண்ணூற்றுறு விதமான முத்திரைகள் கர்ஷணுதி பிராயச்சித்தாந்த கிரியைகள் சில்ப நூல்கள் இவைகளை ஓதிஉணர்ந்தவர்களும், சுரூபசுவாக்மான்களும், ஆசாரஅனுஷ்டானமுள்ளவர்களும், சுகுணவான்களும், தேஜோவான்களும், சிவாசாரியர்களுமாகிய ஆதிசைவர்களைச் சிவமென்றே சொல்லுகிறுர்கள், என்பதாம்.

வீராகமம்.

வேதசாஸ்திரேஷு நிபுணகஃ சைவசாஸ்திர பரிக்ரஃ
மந்தரக்ஞோ மதிமான் பிரக்ஞஃ த்ருடபக்தி த்ருடவிரதஃ
ஆதிசைவ இதிப்பு ரோக்தஃ சசிவப்ராமணோ குருஃ

இ - ள். வேதசாஸ்திரங்களில் நிபுணர்களும், சிவாகமபாரங்கதர்களும், மந்திர சாஸ்திரங்களை அறிந்தவர்களும், விசேஷ புத்தி

மான்களும், திடமான சிவபக்திமான்களும், சிவவிரதிகளுமாகிய அந்த ஆதிசைவர்கள் சிவப்பிராமணர்களென்றும் லோககுருவென்றும் சொல்லப்படுகிறார்கள். என்பதாம்.

சகலாகம சங்கிரகம். இது எல்லா ஆகம தாற்பரியங்களையும் சங்கிரகித்து பரமசிவன் பார்வதிதேவியாருக்கு உபதேசித்தருளியது.

தேவஸ்ய சந்நிதௌ நித்யம்ஆதிசைவ நிரந்தரம்
வேதபாராயணங்காரியம் நாந்யசேதோபி ரத்ரிஜே.

இ - ள். இமோற்பர்வதராஜபுத்திரியே? சிவசந்நிதியில் எப்பொழுதும் ஆதிசைவர்கள் ஒரே மனசாக வேதபாராயணம் செய்யவேண்டும். என்பதாம்.

இதுவுமது.

சிவ தீக்ஷா பரோ விப்ரஃ ஆதி சைவப்ர கீர்த்திதஃ
தஸ்யைவ வேதாத்யயனே அதிகாரோ விதீயதே
சதுர் வேதாந்தீத்வாத ஸ்வஸ்தி கார்யம் நசாபரைஃ
தீக்ஷா பரைரேவகார்யம் ப்ராதாந்யே நமகேஸ்வரி
ஸமீபே தேவதேவஸ்ய சிவதீக்ஷா பரைர்த் விஜைஃ
ஆதி சைவ சதாகார்யம் வேதபாராயணம் புதைஃ

இ - ள். ஆதிசைவன் சிவதீக்ஷாபரனை சிவப்பிராமணனென்று சொல்லப்படுகிறான். அவனுக்கே வேதாத்தியயனத்தில் அதிகாரம் விதிக்கப்படுகிறது. அவன் நான்கு வேதங்களையும் அத்தியயனம் செய்தபின்பு வேதபாராயணம் செய்யவேண்டும். (இவனுக்கே நான்கு வேதங்களில் அதிகாரமுண்டு) மற்றைய பிர்மக்ஷத்ரிய வைசியர்கள் தங்கள் தங்களுக்கு உரிய வேதசாகைகளை அத்தியயனம் பண்ணலாமன்றி அந்நிய வேதசாகைகளை அத்தியயனம் பண்ணக்கூடாது. சிவதீக்ஷாவான்களாகிய ஆதிசைவர்களே முதன்மையான வேதபாராயணர்கள். சிவதீக்ஷாவான்களாயும் வித்வான்களாயும் உள்ள ஆதிசைவர்களாலேயே சிவசமீபத்தில் சதாகாலமும் வேதபாராயணம் பண்ணத்தகுந்தது. என்பதாம்

இதனால், ஆதிசைவர்களாகிய சிவப்பிராமணர்கள், நான்கு வேதங்களும் அத்தியயனஞ் செய்யவும், தங்கீழுள்ள பிர்ம, க்ஷத்திரிய, வைசியர்களுக்குச் சொல்லிவைக்கவும், வேதாத்தியயனவரிசையில், தாங்களே மற்றை மூன்று வருணத்தாரினும் முன்னின்று அதாவது முதன்மையாக அத்தியயனஞ் செய்துவரவும், பரிபூர்த்தி

யான அதிகாரிகளென்பதும், மற்றைய மூன்று வருணத்தாரும் அவரவர்களுக்குரிய அந்தந்த வேதசாகைகள் மாத்திரம் ஓதுதற்குரியர்களன்றி நான்கு வேதங்களும் ஒருங்கே அத்தியயனஞ் செய்தற் குரியரல்லரென்பதும் தெளிவாயது. ஆகவே சிவப்பிராமணர்களுக்கு வேதாதிகாரமில்லை யென்னும் மூடவசனம் தூரம்போய்த் துச்சமா யொழிந்ததென்க.

ஒருவாறு இதுகாறும் கூறிவந்த சுருதியுக்திப் பிரமாணங்களாலும், இன்னும் எத்தனையோ ஆங்காங்குள்ள அதிபிரபல சுருதிப் பிரமாணங்களாலும், பிரமமுகோற்பன வைதிகப் பிராமணர்களைக்காட்டிலும், சதாசிவ முகோற்பன வைதிக சைவப்பிராமணர்களாகிய ஆதிசைவர்கள் மிக மேலானவர்களென்பது விளக்கமாகின்றது. இனி அனுபவத்தாலும் லோகப்பிரசித்தமே. இது சிவாலயாதிகளில் அச்சிவப்பிராமண பாலியர்களிடத்துங்கூட வயசு முதிர்ந்த வைதிகப்பிராமணர் சந்நியாசிகள் முதலிய எல்லாரும் இருகைகளையும் நீட்டி விபூதி வாங்குதல் முதலிய உத்தம காரியங்களால் யாவரும் நேரேதெரிந்த விஷயமே. இவையெல்லா மிங்ஙனமாகவும், இன்னோரன்ன பற்பல அற்புத மகிமைவாய்ந்த சிவதுல்லியர்களாகிய சிவப்பிராமணர்களை, இக்காலத்திற் சிலர் தாம்பிராமணரென்பது பேர்மாத்திரையா யொழியப் பொறாமையாதி தூர்க்குணங்களை மேற்கொண்டு இகழ்ந்து ஒதுக்கிப் பேசுகின்றார்கள். அதிப் பிரபலப்பிரமாணங்களில் ஒருசிறிதும் நோக்காமல் தமக்கு வரும் உய்தியில்லாத சிவத்துரோகத்துக்கே யாளாக நிந்திப்பார்களானால், அங்ஙனம் நிந்தித்தற்குக் காரணம் யாதென்பது புத்திமான்கள் ஊகித்துணரத்தக்கதே. அக்காரணத்தைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் விளக்கிக்காட்டியுள்ளார். அதாவது, "நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக், குலத்தின்க ணையப் படும்." என்னுந் திவ்விய சுருதியே. இதன் பொருள் ஒருவனிடத்து, வேத சிவாகம புராணேதிகாசாதி நூல்களில், உயர்வென்று கூறுகின்ற நன்மையிடத்துப் பிரியமில்லாமை தோன்றுமானால், அவனை உலகம் அவன் குலத்தினிடத்துச் சந்தேகப்படும் என்பதாம். எனவே, அவன் தன் பிதாவுக்குப் பிறந்தவனல்ல தன் தாய் அன்னிய புருஷனைக் கூடிப் பெறப்பட்டவனே என்பதே அத்திவ்விய சுருதியின் கருத்தென்க.

இனி அப்பிராமணர் சிலர் மேற்கூறியவாறு சுருதி யுக்தி அநுபவங்களாலுஞ் சிறந்துள்ள மகிமை நோக்காது, சதாசிவ மூகோற்பன்ன சிவப்பிராமணர்களைச், சிவாலயாதிகளில் கூலிக்குப் பூசை செய்கின்றார்களென்றும், அதனால் அவர்கள் இழிந்தவர்களென்றுங் கூறுகின்றார்கள். கூலிப் பூசனை இழிவுதருமென்ப துண்மையே. "தன்குற்றநீக்கிப் பிறர்குற்றங்காண்கிற்பி, னென்குற்ற மாகுமிறைக்கு" என்பது சுருதி. அப்பிராமணர்களில் கூலிக்கு வேதம் படிப்பிக்கின்றா ரனேகர், கூலிக்குப் பூசை செய்கின்றா ரனேகர், கூலிக்குச் சூரியநமஸ்கார செப தவ ஓமாதிகள் செய்கின்றாரனேகர், கூலிக்குக் கணக்கெழுதுகின்றாரனேகர், அன்னவிக்கிரயமாதி தங்களுக்குச் சிறிதும் பொருந்தாத மிகச்சாமானிய வேலைகள் பற்பல செய்கின்றாரு மனேகர். இவை யெல்லாம் கூலிவேலையல்லவோ?

இவர்களுக்கெல்லாம் இழிவுகூறாமற் பெருமைப்படுத்திக் கொண்டாடுகின்ற அப்பிராமணர்கள், சிவப்பிராமணர்களை மாத்திரம் இழித்துக் கூறினால், அவர்களை ஓரணுத்துணையாவது நீதியுள்ளவர்களென்று பெரியோர்கள் மதிப்பார்களா? அப்பிராமணர்கள் செய்யுங் கூலித் தொழில்களை நான் வெளியிட்டேனென்று என்னைப் புறங்கூறார்கள் தத்தம் வருணாச்சிரம தருமங்கள் நழுவவிடாது மேற்கொண்டொழுகும் உத்தமப் பிராமணர் முதலியோரென்க. எதனால், அக்கூலிவேலைகள் லோகப்பிரசித்தமாதலால்.

இதனால், அத்தியாபகர்கள் முதலிய உத்தமப் பிராமணர்களையுங் கூலித்தொழிலாளரென்று கூறவந்தேனல்லேன். சிவப்பிராமணர்களை, அப்பிராமணர் சிலர் அங்ஙனங் கூறியது நோக்கி எடுத்துக் காட்டியதன்றி வேறில்லை. ஆனால் முடிவுதா னென்னையோ வென்றால்:—சித்தசமாதானத்துடன் உத்தமர்களுணர்வார்களாக. அதாவது சிவாலயத்திற் சிவப்பிராமணர்களாகிய குருக்கள்மார்க்கு மாசம் இன்ன சம்பளமென்று அவ்வதிகாரிகள் பேசிக்கொண்டு கொடுத்து நடத்தலும், பாடசாலாதிபதிகள் கனபாடிகளுக்கு அவ்வாறு பேசிக்கொண்டு கொடுத்து நடத்தலும், கிரகதோஷாதிகளுக்காகச் சூரியநமஸ்கார ஜெப தப பூஜாதிகளுக்கு நாள் ஒன்றுக்கு இன்னது என்று பேசிக்கொண்டு கொடுத்து நடத்தலும், முறையல்ல. பின்னை யெப்படியென்றால், குருக்கள்மார், கனபாடிகள், முதலியோர்களுடைய குடும்ப சம்ரக்ஷணைகளை அதிபதிகளே

செவ்வே நடத்தித் தெக்ஷிணையாகச் சமர்ப்பிக்கவேண்டியதே முறையென்க. இவ்வுண்மை யாவரு மேற்கொண்டு நடத்தும்பொருட்டே சிவாகமாதிகளில் மகாசாந்தியாகிய கும்பாபிஷேகக் கிரியாதிகள் கூறுமிடத்து அந்தச் சிவத்திரவியத்திற் பதினொன்றில் ஒரு பங்கு சிவப்பிராமணர்களாகிய குருக்கள்மார்க்கென்று நியமித்திருக்கின்றது. முற்காலங்களில் மேற்கூறியவாறே நடந்ததாக நூல்கள் கூறுகின்றன. தற்காலத்திலும் சிற்சில இடங்களில் அவ்வாறு மானியங்கள் ஏற்பாடாகி நடக்கின்றன. ஆதலால் சம்பளமென்று பேசிக்கொடுப்பது எவ்வழியினுமுறையல்ல, அங்ஙனமாகவும் சில இடங்களில் அதிபதிகள் சம்பளமாகப் பேசிக்கொண்டு நடத்துவது காலவேற்றுமையாற் போலும் மற்றை யிழிதொழிலாளரை அவர்தலைவிதியே அவையென்று ஒதுக்கிவிட்டு உத்தமகாரியமாகிய அத்தியாபகாதி செய்வோரையும் உத்தமோத்தம சிவகாரியமாகிய சிவாலயபூஜாதி செய்வோரையும் கூலித்தொழிலாளரென்று இழிவு கூறாது புகழ்ந்து பாராட்டுவதே நடுவுநிலை சிறிதுந் தவறாத பெரியோர் கடமையாகும்.

(இன்னும் வரும்.)

சிவமஹாபுராணம்.

அன்னதான பலன்.

வியாஸமுநிவர் ஸநத்குமார முநிவரை நோக்கி, ஸ்வாமீ! உத்தமகுண சிரேஷ்டர்களான வேதியருக்குத் தானஞ்செய்வதிலேயே விருப்பமுடைய அரசன், இவ்வுலகத்தில் யாதுதானத்தைச் செய்யவேண்டும்? அதனையும் எனக்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டும் என வினவ, பிரமபுத்திரராகிய ஸநத்குமார முநிவர் சொல்லத் தொடங்கினர்; தேவர்களும் ருஷிகணங்களும் அன்னமே சிறந்ததென்று சொல்லுகின்றார்கள். அன்னத்திலேயே யாவும் விளங்குகின்றன வாதலின், சத்ஜனங்கள் அன்னதானத்தையே விசேஷமாகச்செய்ய விரும்புவார்கள். அன்னதானத்திற்குச் சமானமான தானம் இதுவரையில் ஒன்றுங்கிடையாது, இனிமேலும் உண்டாகமாட்டாது. அன்னமே சராசரப் பிரபஞ்சமாகிய எல்லாவற்றையும் நிலைபெறச்செய்கின்றது. அன்னமே உலகத்தில் வலிமையையுண்டுசெய்யும். அன்னத்திலேயே பிராணன் பிரதிஷ்டிக்கப்பட்

டிருக்கின்றது. தன் ஆத்துமத்திற்கு இதத்தைச்செய்ய விரும்புவோன், குடும்பத்தைப் பிடித்தாயினும், தன்வீட்டை யடைந்த சந்நியாசிக்கும் அதிதிக்கும் அன்னமளிக்கவேண்டும். தன் ஆத்துமாவிற்கு இகலோகத்திலும் பரலோகத்திலும் சுகத்தையுண்டுசெய்ய விரும்புகிறவன் தன்வீட்டை யடைந்த அதிதிக்கு அன்னமளிப்பானாயின் அது மேலுலகத்திற்குப் பெருந்துணையான நிதியாகவிருக்கும். கீர்த்தியை விரும்பினவன் நடுப்பகலில் மகாசத்ஜனனைய், தூரதேசத்தினின்று வந்தவனைய்த் தன்வீட்டையடைந்த அதிதியைப் பூஜைசெய்யவேண்டும். வியாசமுநிவனே! அன்னத்தையளிப்பவன் சாந்த சீலனாகவும் சத்குணனாகவும் நின்று அதிதிபூஜைசெய்யும் பக்ஷத்தில் இம்மை மறுமைப் பலன்களை யடைவான். தூரதேசத்தினின்று வந்த அதிதியை ஆதரணை செய்யாது திரஸ்கரிப்பவன் மகாபாவத்தையடைவான். தன்வீட்டை யடைந்தவனுடைய குடிப்பிறப்பு, குணம் முதலியவற்றை விசாரணை செய்யவேண்டுவதில்லை. ஒவ்வொருவனுக்கும் அன்னதானங் கொடுப்பதே விசேஷபலனை யளிக்கும். முன்பின் அறியாதவனை அதிதிக்குச் சிரேஷ்டமான அன்னத்தை யளித்தவன் சகல சாம்பிராஜ்ஜியங்களையும் பெறுவான். பிதுரர்களும் தேவர்களும் வேதியர்களும் அதிதிகளுமாகிய இவர்களை, அன்னத்தால் ஆனந்திக்கச்செய்பவன் அநந்தமான புண்ணியத்தை யடைவான். பெரும்பாவியாயிருப்பினும் அதிதிக்கு அன்னமளித்தவனுடைய பாவங்களெல்லாம் நெருப்புப் பொரிபட்ட பஞ்சுப் பொதிபோல நசிக்கும்; அதிலும் அவ்வதிதி அந்தணனயிருப்பின் விசேஷ பலன் கைகூடும். பிராமணனுக்கு அன்னதானஞ் செய்தால் அழியாதபலனைக் கொடுக்கும். சூத்திரனுக்கு அன்னதானஞ் செய்தால் மகத்தான பலனைக் கொடுக்கும். சூத்திரனுக்கு அன்னபானங்களைத் தானஞ்செய்தால் அதினுஞ்சிறந்த பலனைக்கொடுக்கும். அதுவே பிராமணருக்குக் கொடுக்கச் சம்பவித்தால் அக்ஷயமாகும். ஆதரணையற்றுவந்த அதிதியைக் கோத்திரம் சரணம் ஸ்வாத்தியாயம் தேசம் முதலியவற்றை விசாரியாது அவ்வதிதிக்கு அன்னதானஞ் செய்யவேண்டும். அன்னதானஞ் செய்தவன் திவ்வியமான சம்பத்துகள் உண்டாகப்பெற்று, தன் புத்திரமித்திராதிகளால் மதித்து உபசரிக்கப்பட்டு, அவ்வாறே சுவர்க்கலோகத்தில் காமதேனு கற்பகவிருக்ஷ முதலியவற்றால் தனது பணிகள் செய்யப்பெறுவான். வியாஸமுநிவனே!

அன்னதானத்தினால் சுவர்க்கலோகத்தை யடைந்து அதனைப் பிர காசிக்கச் செய்வார்கள். அவ்விடத்தில் அவர்கள் விரும்பிய சுகங் கள் யாவும் சித்திக்கும். பொன்னாற்செய்த கிணறுகளும், மனோகர மான தடாகங்களும், மலர்ச்சோலைகளும், வெண்ணிறத்த வாகனங் களும், சிறந்த பக்ஷியங்களும், தேவான்னமும், சீனிசீனம்பரங்க ளும், நவரத்தினகசிதமான ஆபரணங்களும் அவர்களுக்குண்டா கும். அவ்வுலகத்தில் நதியாகப் பால்பெருக்கெடுத்தோடும். தவள மாளிகைகள், பொன்னிறத்த கட்டில்கள் முதலியவற்றுடன் தாம் விரும்பிய இடங்களிற் சென்று திரும்புவர். புண்ணியகரமான அன்னதானத்தால் இவ்வகைய சிறந்த பதவிகள் கைகூடுவதால் அன்னதானமே விசேஷமாகச் செய்யத்தக்கது. சிராத்தகாலத் தில் சத்பாத்திரனான வேதியனுக்குப் பக்தியோடு அன்னதானஞ் செய்தவன் தனது பிதுர்க்களை அக்ஷயமான பதவியிலிருத்துவான்.

ஸ்ரீ - சோமசுந்தரநாயகரவர்கள்

இயற்றிய

அர்ச்சாதீபம்.

அகண்ட சச்சிதாநந்த ஸ்வரூபமாயுள்ள பரவஸ்து ஒன்றுள் தெனக் கைக்கொண்டொழுகும் ஆஸ்திகர் பலருள் அந்தப் பரம் பொருளைச் சிலர் நிர்க்குணமாகவும், சிலர் ஸகுணமாகவும், சிலர் சகுண நிர்க்குணமாகவும், சிலர் இவை மூன்றுடன் இவற்றைக் கடந்ததாகவும் அறிந்து விவகரித்து வருகின்றார்கள். இவற்றுள், நாலாவது சொன்ன சித்தாந்தமே எமது சைவசித்தாந்தம். இந்த சித்தாந்தங்கள் நான்கனுள் நிர்க்குணவாதமொன்றே ரூபத்தை அங் கீகரியாதது. ஏனை மூன்று சித்தாந்தங்களும் முறையே ரூபமாக வும், ரூபா ரூபமாகவும், ரூபம்-அரூபம்-ரூபாரூபம் இம்மூன்றுடன் இவற்றைக் கடந்ததாகவும் அங்கீகரியாநிற்கும். ரூபத்தை அங்கீ கரிப்பவர்கள் வைஷ்ணவர்கள். ரூபாரூபத்தை அங்கீகரிப்பவர்கள் வேதாந்திகள். ரூபம்-அரூபம் - ரூபாரூபம்-அதீதம் இவைகளை அங்கீகரிப்பவர்கள் சைவசித்தாந்திகள். கேவலம் அரூபத்தை அங் கீகரிப்பவர்கள் வேதஸம்பந்திகளில் ஒருவருமின்று. இதனால் கேவ லம் அரூபவாதிகள் வேதபாஹ்யரென்பது சித்தித்தது. மேற்கூறிய

வைஷ்ணவர்கள் முறையே மத்வராமாநுஜ ஸித்தாந்திகளாவர். வேதாந்திகள் சங்கரபாஷ்யாநுசாரிகளாவர். சைவசித்தாந்திகள்முறையே நீலகண்ட பண்டிதபாஷ்யாவலம்பகர்களாவர். சங்கரபாஷ்யாநுசாரிகள் விவகார பரமார்த்தமென்னு மிரண்டில் விவகாரத்தில் சிவனையே துரியமூர்த்தியாக வொப்புக்கொண்டமையால், அவருஞ் சைவரேயாவர். அவரது பரமார்த்தத்தை நோக்கியே அவரை வேறு சமயிகளாக யாம் காட்டியதன்றி வேறில்லை. இந்த வியவஸ்தையால் வைஷ்ணவம் இரண்டு விதமாகவும், சைவம் மூன்று விதமாகவும் பாஷ்யரீதிகளை நோக்கி யாவரும் விவேகிக்க வேண்டியது. இந்த ஐந்து மதங்களைக்காட்டிலும் பாஷ்ய சித்தமான வேறு மதமொன்றுங்கிடையாது. மேல் யாம் கூறிய வுண்மைப்படி இந்த ஐந்து மதஸ்தர்களும் ரூபத்தை அங்கீகரித்த அடையாளமாக அவரவர்களுக்கும் ஆத்மார்த்த பரார்த்தபூசைகள் சிறந்திருக்கின்றன. இந்தப்பூசைகள் ஏதாவதொன்றிற் பாவனையாகச் செய்யப்படுமன்றி அந்யதாகூடாது. இப்படியே யாவருஞ் செய்து வருகின்றனர். இதனால், வேதவித்துக்களாவார் பகவதுபாசனையை அர்ச்சாமார்க்கத்திற் செய்யவேண்டுமென்பது இனிது சித்தித்தது.

இவ்வுண்மைகளையறியாத சிலர் மேல் சித்தாந்தங்கள் ஒன்றினுஞ் சேராத (பிரஹ்மசமாஜம்) என்னும் அவாந்தர கல்பிதநாமத்தால் ஒரு கூட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு கிறிஸ்துசமய ஏற்பாட்டில் சில பாகங்களைத் தழுவி யாம் வைதிகர்கள் என்று பிரஸ்தாபித்துப் பிரவர்த்தித்து வருகின்றார்கள். (பிரமசமாஜமெனப் பேசு மதமெங்கே—உரமுறக்கண்டிங்கே நீயோதல்) எனவும், (எங்கேயவர் மதநூலெக்காலந்தோன்றியது—பங்காருமுன்னோரார் பார்த்தறியாய்-கொங்காரு—நன்மாலை வேய்ந்திட்ட நல்லாசிரியரெவர்) எனவும் போந்த வினாக்களை யோசிக்கின், அவர் பெருமை இனிது விளங்கும். இவர்கள் வேதத்தைக் கரைகண்டவர்களாகத் தங்களை மதித்துக்கொண்டு வேதத்தில் பிரஹ்மத்துக்கு ரூபஞ்சொல்லவில்லையெனவும், ரூபமில்லாத பிரஹ்மத்தை ரூபமாக விக்கிரகங்களில் வணங்குவது கூடாதெனவும், அர்ச்சைகளை வணங்குவதற்கு வேதத்தில் ஆதரவில்லை யெனவும் பிரசங்கித்து சாமானியர்களை மயக்கி வருகின்றார்கள். சில பத்திரிகைகளையும் வெளியிட்டுச் சந்தோஷிக்கின்றார்கள். ஆகையால், அவர்களுடைய அபிமதத்தைக் கொஞ்

சம் ஈண்டெடுத்துக் காட்டி, அதிலுள்ள தோஷங்களை விளங்கத் தீட்டி, எமது வைதிக சித்தாந்தத்தி னுண்மையை இனிது நாட்டி, ஸாதுக்கள் ஸந்தோஷிக்கும்படி ஸ்போதாம்ருதத்தை யூட்டி உபகரிப்பாம்.

அன்னோர் பயனிலவான பல வீண்விஷயங்களிலெல்லாந் தலையிட்டுக்கொண்டு விவகரித்து வருகின்றார்களேனும், அவைமுழுதும் யாம் கவனிப்பது அவசியமல்ல. வேதங்களைப் பிரமாணமாகத் தேடி விவகரிக்கும் விஷயத்தைமாத்திரமே யாம் கவனிப்பது அவசியம். (வேதஸமாஜ முதல் விண்ணப்பம்) என்னுஞ் சுவடியிலும் வேறு சில பத்திரிகைகளிலும் அவர்கள் திருப்பித்திருப்பி யெழுதி மகிழ்ந்து கொண்டாடி யுதகரிக்குஞ் சில சுருதிவசனங்களுள. அவைகளையும், அவைகளுக்கு அவர்களெழுதிய வுரைகளையும் ஈண்டு முன்னர்க் காட்டி, அநந்தரம் அவைகளெத்தகைய யோக்யதையுடையனவென்னு முண்மையையும் பிரகாசப்படுத்துவாம்.

க-வது,—"ததோயதுத்தரதரம் ததரூபமநாமயம்" என்னுஞ் சுவேதாசுவதர வாக்கியத்தை உதகரித்து, இதில் (அரூபம்-அநாமயம்) என்று பிரஹ்மங் கேட்கப்படுகையால் பிரஹ்மத்துக்கு ரூபமில்லையென்று சாதிக்கின்றார்கள்.

உ-வது,— "அஸப்தமஸ்பர்ஸமரூப மவ்யயம்" என்னுங் கடோபநிஷத் வாக்கியத்தை உதகரித்து, இதில் (அரூபம் - அவ்யயம்) என்று பிரஹ்மங் கேட்கப்படுகையால் பிரஹ்மத்துக்கு ரூபமில்லையென்று சாதிக்கின்றார்கள்.

ங-வது,—"நதத்ரசக்ஷுர்க்கச்சதிநவாக்கச்சதி நோமநோநவித்மோ நவிஜாநீமோயதை ததனுஸிஷ்யாத், அந்யதேவதத்விதிதாததோ அவிதிதாததி, இதிசுஸ்ருமபூர்வேஷாம் யேனஸ்தத்வ்யாசசக்ஷிரே"

என்பனவாதியாய கேனோபநிஷத்வாக்கியங்களை உதகரித்து இவைகளில் கண்-வாக்கு-மனசுகளுக்குப் பிரஹ்மம் எட்டாது, கண் முதலியவைகளால் பிரஹ்மம் விளங்காது, பிரஹ்மத்தால் கண்முதலியவை விளங்குகின்றன. எதை இது என்று உபாசிக்கிறார்களோ அது பிரஹ்மமல்ல என்று சொல்லப்படுவதால், அர்ச்சாபிம்பங்கள் ஸ்பஷ்டமாய் விலக்கப்பட்டனவென்று சாதிக்கின்றார்கள்.

ச-வது,—"யதாஹ்யேவைஷயேதஸ்மின் அத்ருஸ்யே அநாத்மே" என்னுந் தைத்திரிய வசனத்தை உதகரித்து, இதில் (அத்ருஸ்ய - அசரீர) சப்தங்களிருப்பதால் பிரஹ்மம் திரிசியமாகாதது, ரூபமற்றது என்று சாதிக்கின்றார்கள்.

ரு-வது,—"நபர்யகாச்சு க்ரமகாயமவ்ரணம்" என்னும் வாஜசநேய வாக்கியத்தை உதகரித்து, இதில் (அகாயம்) என்று பிரஹ்மம் கேட்கப்படுகையால், அந்தப் பிரஹ்மத்துக்கு எவ்வித சரீரமுங் கிடையாது. என்று சாதிக்கின்றார்கள்.

சு-வது,—"அம்ததமஃ ப்ரவிஸம்திமே ஸம்பூதி முபாசதே, ததோபூய இவதே தமோயே ஸம்பூத்தியாக்ரதாஃ" என்னும் வாஜஸநேயவாக்கியத்தை உதகரித்து, இதில், படைப்பை = விக்கிரகங்களைத் தொழுவோர்கள் கொடிய அந்தகாரத்தை அடைவார்களென்று கேட்கப்படுகையால் விக்கிரகாராதனங் கூடாதென்று சாதிக்கின்றார்கள்.

இவ்வாறு அவர்கள் எடுத்துக்காட்டுவதனால், அவர்களுடைய கொள்கை பிரஹ்மம் என்பதொரு பொருளுண்டெனவும், அது ரூபமில்லாதது எனவும், அதை விக்கிரகமாக வணங்குவது கூடாதெனவும் ஏற்படுகின்றது. இனி, அவைகளை முறையே யாம் பரியாலோசிப்பாம்.

முதல் வசனத்துக்குப் பூர்வபட்சிகள் (அவனைச் சிறந்ததிலெல்லாஞ் சிறந்தவனென்றும், ரூபமும், துன்பமு மற்றவனென்றும் அறியவேண்டியது) என்று பொருள் கூறுகின்றனர். அந்த வசனத்தில் (தத்) என்று நபும்ஸகலிங்கமே கேட்கப்படுகின்றது. நம்மவர் அதைப் புல்லிங்கமாகக்கொண்டனர். சுவேதாஸ்வதரம் பஞ்சருத்ரங்களி லொன்றாகையால் பூர்வோத்தர ஸம்பந்தங்களை நோக்கி நம்மவர் அவ்வாறு கூறியிருக்கலாம். அப்போது சுவேதாஸ்வதரம் ருத்ரனாகிய புருஷனைப் பிரதிபாதிப்பது என்று அவர்களே கொண்டிருக்கவேண்டும். அங்ஙனங் கொள்ளுங்கால், புருஷரூபமுடைய ருத்ரனை ரூபமற்றவனென்று சாதிக்க முயன்றது தவறு. ருத்ரபதமும், பிரஹ்மபதமும் ஒரேபொருளைச் சுட்டிய பரியாயபதங்களென்பதை (ஏகயேவருத்ரோ நத்விதிய்யாயதஸ்தே) எனவும், (ஏகமேவாத்விதீயம்ப்ரஹ்மா) எனவும் போந்த சுருதிகளாலறிக. அன்றியும், (சர்வோஹ்யேஷருத்ரஃ) எனவும், (சர்வம் கல்பிதம் ப்ரஹ்மா) எனவும் அநந்தமுள. இதனால் அந்தப் பரமாத்மாவை அது என்றாலும், அவன் என்றாலுந் தோஷமில்லை. அது அது

என்றும், அவன் அவன் என்றும் எண்ணிறந்த சுருதிகள் கோஷிக்கின்றன. நம்மவர் அவன் என்று கூறியபொருள் எமக்கு விரோதமில்லை. அவன் என்பது ருத்ரனாகிய புருஷன் என்று கூறுவதற்கு "புருஷோவைருத்ரஃ" எனவும், "புருஷம் க்ருஷ்ணபிங்களம்" எனவும், "தத்புருஷாய வித்மஹே" எனவும், "புராதனோஹம் புருஷோஹமீசஃ" எனவும், "தமீஸாநம் புருஷம்" எனவும், "ஸஹஸ்ரஶீர்ஷாபுருஷஃ" எனவும் பல சுருதிகள் சான்றுரைக்கின்றன. இத்யாதி சுருதிபாஹுள்யங்களைத் தரிசித்தபிறகும் யாவரோ பிரஹ்மத்துக்கு ரூபமில்லையென்று வாய்திறப்பார்கள்? ஆயின், அந்த வசனத்தில் (தத்ரூபம்) என்று அரூபத்தைக்கூறிய தென்னையெனின், இந்தக் கிரந்தத்தில் க-வது பக்கத்தில் பிரஹ்மமானது உருவம்-அருவம்-உருவருவம்-அதீதம் என்னுந் தன்மையினது என்று யாம் காட்டினோமாகையால், அது அருவமாவதிலுந் தோஷமில்லை. (அருவமோ ரூபாரூபமானதோவன்றிநின்ற - வுருவமோ வுரைக்குங் கர்த்தாவடிவெனக் குணர்த்திங்கென்னி - லருவமும் ரூபாரூபமானது மன்றிநின்ற - வுருவமுமூன்றுஞ் சொன்ன வொருவனுக்குள்ளதாமே) எனவும், (சிவனுருவருவுமல்லன்) எனவும், (உருவன்றருவன்று) எனவும், (இன்னதன்மையனென்றறியாச் சிவன்) எனவுஞ் சைவநூல்கள் கூறுமுறைமை கண்டுணர்க. சைவநூல்களில் உருவம் - அருவம் - உருவருவம் - அதீதம் என்னும் இவைகளில் எதுவரினும் சைவராயுள்ள பெரியோர்களுக்கு விரோதமுண்டாகாது. அப்படியே வேதவேதாந்தங்களிலும் உண்டாகாது. அவற்றினுண்மை தெரிந்தால் யாவருக்குமே உண்டாகாது. அந்த வுண்மையை இடம்வந்துழிவிரிப்பாம். இதனால், (தத்ரூபம்) என்று காட்டிய வசனத்தால் பிரஹ்மம் அரூபமேயென்று சாதிக்கப்படமாட்டாது.

உ-வது காட்டிய வசனத்தில் அந்தப்பிரஹ்மம் ஸப்த ஸ்பர்ஸ ரூப ரஸ கந்தாதிகளை அடையாதது என்று கூறுவதும் பூர்வபட்சிகளுக்கு உபகாரஞ்செய்திலது. இந்தவிவிதங்கள் மாயையிலுண்டான தத்வபேதங்களாகையால், இவற்றைக் கொண்டிலது பிரஹ்மம் என்ற எமது ஸித்தாந்தத்துக்கே உபகாரஞ்செய்தது. ஆகையால், (ரூபமற்றும்) என்ற பிரயோகமானது ரூபதன்மாத்திரையையே மறுத்தது. இதனை நம்மவர் (ரூபவிஷயம்) என்று கிரஹித்துப் பிரஹ்மத்துக்கு உருவமில்லையென்று சாதிக்கின்றார்கள். இனியாவது கூர்ந்து யோசிக்கட்டும். (இன்னும் வரும்.)

திருவண்ணாமலை
தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

அகண்டாகார சச்சிதானந்த பரிபூரணசுயம்பிரகாசப் பொருளாய் விளங்கும் ஸ்ரீ கைலாயபதியானவர் இந்த உலகத்தினுள் ஆங்காங்கிருக்கும் ஆன்மகோடிக ளுய்யும்பொருட்டுத் திருக்கோயில் கொண்டிருக்கின்ற பல ஸ்தலங்களுள், ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தசுவாமிகள், ஆளுடையவரசுகளாகிய திருநாவுக்கரசு சுவாமிகள், ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆளுடைய வடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் இந்நால்வர்க ளருளிச்செய்த தேவார திருவாசகங்களை உடையனவாய்ச் சோணாடு முதலிய தேசங்களில் இன்னஇன்ன நாட்டில் இத்தனை இத்தனை ஸ்தலங்களென்று முன்னோர்கள் ஏற்படுத்தின கிரமப்படியே நடுநாட்டுக் குள்ளிருக்கும் ஸ்தலங்களுள் விசேஷமாகிய திருவண்ணாமலை யென்னுந் திருப்பதியும் ஒன்று.

இது கிருதயுகத்தில் அக்கினிமலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும் திருவுருக்கொண்டு, அருணாசலம், சோணாசலம், கௌரிநகரம், தேசுநகரம், முத்திநகரம், ஞானநகரம், சிவலோகம் என்பன வாதியாகப் பல பெயர்களையுடையதாய், சிவபெருமானே கிரிரூபமாய் இருக்கப்பெற்றதாய், பார்வதியார் திருவவதாரமானதும், திருக்கண் புதைத்ததும், மகிடாசுர மர்த்தனஞ் செய்ததும், இடப்பாகம் பெற்றதும், சந்திரவம்சத்தனாகிய வச்சிராங்கத பாண்டியன் பேறு பெற்றதும், அக்கினி வம்சத்தனாகிய வல்லாளராஜன் புத்திரசோகந்தீர்த்ததும், இந்திரதீர்த்த முதலாகிய அநேக தீர்த்தங்களுள்ளதும், ஆதித்தனுக்குத் தரிசனங்கொடுத்ததும், சூரியவம்சத்தனாகிய பிரதத்வராசனால் அனேககாணிக்கைகள் பெற்றதும், அஷ்டவசுக்கள் பிரமன் முதலானவர்கள் பாவந்தீர்த்ததும், புளகாதிபன் பேறுபெற்றதும், அன்பர்கள் தவம்புரிந்து நற்கதியடையப்பெறுவதும், நினைக்க முத்திதரும் தலமென்றும் புராணத்திற் சொல்லப்படுவதுமாய ஒப்பற்றதலமாம்.

பரமசிவம் மலையுருவமானதற்குக்காரணம் யாதெனின், ஒரு கற்பத்தில் மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் தான்தான் பிரமமென்று வாதித்துப் போரிட்டதைத் தீர்க்கும்பொருட்டுச் சிவபெருமான்

அக்கினிமலையாய் அவர்கள் மத்தியில்நின்று கலகத்தைத்தீர்த்தருளி அவர்கள் வேண்டுகோளினால் ஒருசிறிய மலையாயுருக்கொள்ள, அதைக்கண்ட பிரமதேவனும் மகாவிஷ்ணுவும் சுவாமியைநோக்கி இம்மலையினுச்சியில் ஒருசோதி எந்நாளுந் தெரியும்படி கிருபை செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமான் அங்ஙனமாகுக வென்றருளினர்.

கார்த்திகைமாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் இம்மலையி னுச்சியில் ஒரு சோதிகாண்பிப்போம். அச்சோதியைத் தரிசித்தவர்கள் தரித்திரமும் வியாதியும் நீங்கி இஷ்டகாமியங்களைப் பெற்று வாழ்வார்கள். இவையல்லாமல் அரசர்களும் தவசிகளும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி வாழ்வார்கள், அன்றியும் இதைத் தொழுதவர்களுக்கும் தரிசித்தவர்களுக்குமே யல்லாமல் அவருடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் மோக்ஷங்கொடுப்போம் என்று திருவாய்மலர்ந்தருளினர்.

மேலும் இம்மலை ஜனனமரணமென்னும் வியாதிக்கு மருந்து போல இருப்பதினால் மலைமருந்தென்றும் அழல்வண்ணமாயிருப்பதினால் அருணசலமென்றும் பெயர் பெறக்கடவது. இந்நாமத்தை ஒருதரம் சொன்னவர்க்குப் பஞ்சாட்சரத்தை மூன்று கோடிதரம் உச்சரித்தபலன் வருமென்று அருளிச்செய்தார்.

அதற்குப்பிரமனும் மகாவிஷ்ணுவும் ஆநந்தமடைந்து சிவபெருமானைப்பார்த்துத் தேவரீர் இவ்வாறு மலைக்கோலமாயிருந்தால் அடியேங்கள் எப்படி பூசை செய்யக் கூடும். ஆகையால் இந்த மலையின் கீழ் ஒரு சிவலிங்கமூர்த்தியா யெழுந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். சிவபெருமான் அப்படியே சிவலிங்கமூர்த்தமாவோமென்று அந்த மலையினுள்ளே மறைய, உடனே அம்மலையினிடத்தில் சிவலிங்கந்தோன்றியது. அதைக் கண்டு பரமானந்தராய் மயனென்னுந் தேவதச்சனால் ஓராலயங் கட்டுவித்தார்கள், அப்போது அந்த இடத்தில் வளப்பம் பொருந்திய நகரமும் மூந்நூறு தீர்த்தங்களும் உண்டாயின. அல்லாமலும் ஆகாயகங்கை கிணறுகளாகவும், கற்பகவிருட்சங்கள் மரங்களாகவும், வந்திருந்தன. தேவர்களும் ரிஷிகளும் மனிதர்களாக வந்து பிறந்தார்கள். அரம்பா ஸ்திரீகள் தாசிகளாகப் பிறந்தார்கள். ஆகையால் எல்லாஸ்தலங்களும் உடலென்றும் அருணசலஸ்தலம் முக

மென்றும் அதில் சிவபெருமான் கண்ணென்றும் இந்தஸ்தலத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுதற் கருமையென்றும் இரண்டாம் சம்புவாகிய நந்தீசுரர் மார்க்கண்டேயமுனிவருக்கு அநுக்கிரகஞ்செய்தார். அக்காலத்தில் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளியபடி அம்மலையின் மேல் கார்த்திகை மாதத்தில் வருகிற கார்த்திகை நட்சத்திரத்தில் சோதி தரிசனமாகிக் கொண்டுவந்த பாவனையாக இப்போதும் அந்த மலையின்மேல் தீபதரிசனமாகின்றபடியால் அத்தினத்தில் இந்திரதீர்த்த முதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து கிரியை வலம் வந்து தங்கள் சத்திக்குத் தக்கபடி தர்மங்களையுஞ் செய்து அருணாசலேசுரரைத் தொழுது தீபதரிசனமுஞ் செய்து துதிப்பவர்கள் அளவிலாச் சம்பத்தையும் மோக்ஷத்தையு மடைவார்கள். இதன்றியும்,

(இன்னும் வரும்.)

மோசூர் - முனிசாமிமுதலியார்.

பத்திரிகையின் தாமதம்.

இதுவரையில் நமது வைதிக சைவ அச்சுக்கூடத்தை சென்னை பாளையப்பன்வீதியில் 43 வது கதவிலக்கமுள்ள எமது வீட்டிலேயே வைத்திருந்தோம். அதை இம்மாதமுதல் சென்னை தங்கசாலை வீதியில் 292 வது கதவிலக்கமுள்ள வீட்டில் வைத்திருக்கிறோம். இனி இவ்வீட்டிலேயே இப்பத்திரிகையின் சம்பந்தமான சகல காரியங்களும் நடைபெறும்.

அச்சுக்கூடத்தின் இடம் மாறினதற்கு மாஜிஸ்ட்ரேட் அவர்களுடைய அநுமதியை எதிர்பார்த்திருந்தமையால் இம்மாதப் பத்திரிகை வெளிவரச் சிறிது தாமதமாயிற்று.

இ. ஆதிமூலமுதலியார், (ப-ர்.)

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் இலவச வாசகசாலை. (Free Reading Room.)

சென்னை தங்கசாலைவீதியில் 292 வது கதவிலக்கமுள்ள இவ்வாசகசாலையில் பல தமிழ் நூல்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. எவர்களும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையில் வந்திருந்து தங்களுக்கு விருப்பமான நூல்களை வாசிக்கலாம்.

இ. ஆதிமூலமுதலியார்,
காரியதரிசி.